RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 62 | மார்ச்.11 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் இந்தியாவின் விளையாட்டு தலைநகரம் தமிழகம் : தமிழக அரசு பெருமிதம்

சென்னை: மார்ச்.11-

'கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில், இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழகம் உருவாகியுள்ளது' என தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: திமுக ஆட்சியில், இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக தமிழகம் உருவெடுத்துள்ளது.

இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்தவும், சிதறிக் கிடக்கும் இளைஞர்களின் ஆற்றல்களைத் திரட்டவும், அவர்களை மனஉறுதி படைத்தவர்களாக உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் வகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சிறப்பான பணிகளுக்கு தமிழக அரசு ஊக்கமளித்து வருகிறது.

திமுக அரசு சார்பில், 44வது செஸ் ஒலிம்பியாட், சென்னை ஃபார்முலா4 கார் பந்தயம், சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப், ஸ்குவாஷ் உலகக் கோப்பை, ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டு, உலகளவில் விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் தமிழகம் முக்கியமான விளையாட்டு களமாக மதிக்கப்படுகிறது.



விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்கும் வீரர்களுக்கு பயிற்சிகள் பெற உதவித் தொகை, தங்கும் இடவசதி, போட்டிகளில் பங்கேற்க வெளி ஊர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுவரும் பயணச் செலவு, வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்குப் பரிசுகள், ஊக்கத்தொகைகள் அனைத்தும், போட்டிகளுக்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

சிறந்த வெற்றிகளை ஈட்டி தமிழகத்துக்கும், மத்திய அரசுக்கும் புகழ் தேடித்தரும் வீரர், வீராங்கனைகளுக்கு அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்களில் உயர் ஊதியத்துடன் பணி நியமனம் வழங்கப்படுகிறது. மூன்று சதவீத இடஒதுக்கீட்டின்கீழ் 5 ஆண்டுகளில் 70 மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 301 விளையாட்டு வீரர்கள் அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அதே போல், சர்வதேச தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 6,689 வீரர் வீராங்கனைகளுக்கு ரூ.215.78 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை செம்மஞ்சேரியில் ரூ.261 கோடியில் உலகத் தரத்திலான விளையாட்டு நகரம் அமைக்கப்பட்டு வருகிறது. 234 தொகுதிகளிலும் தொகுதிக்கு ஒரு சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என அறிவித்து, 141 அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கும், 12,831 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம், 'இந்தியாவின் விளையாட்டு தலைநகரம் தமிழகம்' என இன்று பெற்றுள்ள புகழ், நாளை 'உலகின் விளையாட்டுத்தலைநகரம் தமிழகம்' என்னும் பெருமையையும் புகழையும் ஈட்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு உரிமம் பெற்ற 2,364 துப்பாக்கிகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும்: காவல் ஆணையர் உத்தரவு

சென்னை: மார்ச்.11-

சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, உரிமம் பெற்ற 2,364 துப்பாக்கிகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என, காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, சென்னை காவல் ஆணையர் அருண் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சட்டப்பேரவை தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. அதற்கு முன்னரே தேர்தல் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளில் சென்னை காவல்துறை ஈடுபட்டுள்ளது.

அனுமதி பெற்று வைத்துள்ள 2,364 துப்பாக்கிகளை உடனடியாக திரும்ப ஒப்படைக்க சம்மந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளோம். காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உட்பட சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 சட்டப்பேரவை தொகுதிகள் வருகிறது.



அவற்றில் 5,445 வாக்குச்சாவடிகள் உள்ளன. இவற்றில் 1,077 பதற்றமானவை. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட உள்ளது. சென்னையில் 5,055 ரவுடிகள் உள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறையில் உள்ளனர். இவர்களில் 2,300 ரவுடிகளிடம் எந்த குற்றமும் செய்ய மாட்டோம் என எழுதி வாங்கி உள்ளோம். இந்த உறுதிமொழியை மீறினால் பிணையில் வெளிவர முடியாதபடி சிறையில் அடைக்கப்படுவர். பல ரவுடிகள் சென்னைக்குள் நுழையாதபடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்கள்

வதந்தி, அவதூறு, உண்மைக்கு புறம்பான தகவல்கள் பரப்பப்படுவதை தடுக்க சமூக வலைதளங்களை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பணத்தை பறிமுதல் செய்ய 56 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளது.

அவர்களுடன் ஒருங்கிணைந்து போலீஸார் பணியாற்றுவார்கள். சென்னையில், இதுவரை 7 இடங்களில் மட்டுமே போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேர்தலை முன்னிட்டு 350க்கும் மேற்பட்ட இடங்களில் பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி அளிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மேலும், சென்னையில் ஒரு இடத்தில், ரோடு ஷோ நடத்த அனுமதிப்பது குறித்தும் ஆலோசிக்கிறோம். தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட மத்திய தொழில் பாதுகாப்பு படையினரும் வருகின்றனர். இவ்வாறு ஆணையர் தெரிவித்தார். அப்போது, நுண்ணறிவு பிரிவு துணை ஆணையர் ராமமூர்த்தி உடன் இருந்தார்.

## கரூர் துயரம் குறித்து சிபிஐ சம்மன் மார்ச் 17ல் ஆஜராகிறார் செந்தில் பாலாஜி!

கரூர்: மார்ச்.11-

கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளதால், மார்ச் 17ம் தேதி நேரில் ஆஜராகி உரிய விளக்கங்களை அளிக்க உள்ளதாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த ஆண்டு செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சார கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது தொடர்பாக தவெக தலைவர் விஜய், தவெக நிர்வாகிகள், மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஐ.ஜி, எஸ்.பி ஆகியோரிடம் சிபிஐ விசாரணை நடத்தியது. இந்நிலையில் டெல்லி சிபிஐ அலுவலகத்தில் தவெக தலைவர் விஜய் ஆஜராகக்கூறி அன்மையில் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு அவர் 15 நாள் அவகாசம் கேட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, ஏஎன்ஐ செய்தி நிறுவனம், கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பான விசாரணைக்கு ஆஜராகக் கூறி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு



சம்மன் அனுப்பியதாகவும், அதனை செந்தில் பாலாஜியோ, அவரது பிரதிநிதிகளோ அவரது வீட்டிலோ, அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளவில்லை எனவும், மேலும் அவரது இமெயிலுக்கும் சம்மன் அனுப்பப்பட்டதாகவும் அதற்கு அவர் எவ்வித பதிலும் (ரெஸ்பான்ஸ்) அளிக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தது.

இதுகுறித்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, ''கரூர் அருகேயுள்ள ராமேஸ்வரப்பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு சிபிஐ அதிகாரிகள் கடந்த இரு நாட்களுக்கு முன் வந்து என் தந்தை வேலுசாமியிடம் நான் எங்கே என கேட்டுள்ளனர். அவர் நான் சென்னை சென்றிருப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் என்னை தொடர்பு கொண்டபோது அவர்கள் கடிதம் எதுவும் அளித்தால் பெற்றுக்கொள்ளுமாறு தந்தையிடம் தெரிவித்தேன். ஆனால், அவர்கள் சம்மன் எதுவும் அளிக்கவில்லை. எனது அலுவலகத்திற்கோ, இமெயிலுக்கோ சிபிஐ சம்மன் எதுவும் அனுப்பவில்லை'' என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி இமெயிலுக்கு இன்று (மார்ச் 10ம் தேதி) காலை சிபிஐ சம்மன் அனுப்பியதாக கூறப்படுகிறது.

இது குறித்து முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ''கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக, சிபிஐ சம்மன் அனுப்பியது குறித்து முன்னுக்கு பின் முரணாக சில ஊடங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. வருகின்ற மார்ச் 17ம் தேதி அன்று நேரில் வந்து விளக்கமளிக்குமாறு சிபிஐ அனுப்பிய சம்மன் அடிப்படையில், அவர்களது கேள்விகளுக்கு நேரில் சென்று உரிய விளக்கங்களை அளிக்கவுள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார்.

## அரசு துறைகளில் நிரந்தர பணியாளர்களையே நியமிக்க வேண்டும் : அன்புமணி வலியுறுத்தல்

சென்னை: மார்ச்.11-

மக்கள் நலவாழ்வுத்துறை உள்பட அனைத்துத் துறைகளில் ஒப்பந்த முறை நியமனங்கள் ரத்து செய்யப்படும்; நிரந்தர அடிப்படையில் மட்டுமே பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று முதலமைச்சர் அறிவிக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அன்புமணி ராமதாஸ் தனது எக்ஸ் தளத்தில், "தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் தவிர பிற பணிகளுக்கு இனி நிரந்தர அடிப்படையில் எவரையும் நியமிக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த செய்தி உண்மையானதாக இருந்தால் சமூகநீதிக்கும், கண்ணியமான மனிதவாழ்க்கைக்கும் எதிரான இந்த நடவடிக்கை கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற மக்கள் நலவாழ்வுத் துறையின் ஆய்வுக் கூட்டத்தில், நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு செலவுகளைக் குறைக்கும் வகையில் அரசு மருத்துவமனைகளில் செவிலியர்கள், மருந்தாளுனர்கள், ஆய்வக நுட்புனர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் இனி நிரந்தரமாக நியமிக்கப்படக் கூடாது என்றும், ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே நியமிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



அரசுத்துறைகளில் டி பிரிவு பணிகளில் மட்டும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சி பிரிவு பணியிடங்களுக்கும் இந்த முறையை நீட்டிப்பது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் எம்.எப் பரூக்கி, சி.சந்திரமவுலி, தேவ. ஜோதி ஜெகராஜன் உள்ளிட்ட ஐவர் அடங்கிய மனிதவள சீர்திருத்தக் குழுவை 18.10.2022 ஆம் நாளிட்ட 115 எண் கொண்ட அரசாணை மூலம் தமிழக அரசு அமைத்தது. அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அக்குழுவின் ஆய்வு வரம்புகள் மறு ஆய்வு செய்யப்படும் என அரசு அறிவித்தது.

ஆனால், அவ்வாறு செய்யப்படாததால், பரூக்கி தலைமையிலான குழு பணியை தொடங்காத நிலையில், எந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. அதையும் கடந்து இது போன்ற கொள்கை முடிவுகள் அமைச்சரவையில் தான் எடுக்கப்பட வேண்டும். மாறாக, இந்த முடிவை தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் எடுக்கிறார்கள் என்றால் முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் பொம்மைகள் தானா?

சுகாதாரத்துறையில் ஏற்கனவே மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பணி நிலைப்பு செய்யும் நடைமுறை உள்ளது. இந்த நடைமுறையே மாற்றப்பட வேண்டும்; அனைத்துப் பணியாளர்களும் நேரடியாக நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை ஆகும்.

ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்படும் போது அதில் இட ஒதுக்கீட்டு முறை கடைபிடிக்கப்படாது. இது சமூகநீதியை படுகொலை செய்யும் செயலாகும். இது தான் திமுக அரசு சமூகநீதியை காக்கும் லட்சணமா? இதைத் தான் திமுக விரும்புகிறதா? என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கமளிக்க வேண்டும், மக்கள் நலவாழ்வுத்துறை உள்பட அனைத்துத் துறைகளிலும் ஒப்பந்த முறை நியமனங்கள் ரத்து செய்யப்படும்; நிரந்தர அடிப்படையில் மட்டுமே பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று முதலமைச்சர் அறிவிக்க வேண்டும்'' என வலியுறுத்தியுள்ளார்.

## விஜய் வாகனத்தை பின்தொடர்ந்தபோது விபத்தில் சிக்கிய இளைஞருக்கு அன்பில் மகேஸ் ஆறுதல்

### அரசியல் செய்வதாக தவெக நிர்வாகி குற்றச்சாட்டு

தஞ்சாவூர்: மார்ச்.11-

தவெக கூட்டத்தில் பங்கேற்க விஜய் சென்ற வாகனத்தை பின் தொடர்ந்தபோது விபத்தில் சிக்கி காயமடைந்த மாணவரை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து ஆறுதல் கூறினார். தஞ்சாவூர் அருகே அய்யாச்சாமிபட்டியில் மார்ச் 4ம் தேதி தவெக நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது.

இதில், பங்கேற்க திருச்சியில் இருந்து தஞ்சாவூருக்கு வந்த தவெக தலைவர் விஜய்யின் வாகனத்தை பின்தொடர்ந்து இருசக்கர வாகனத்தில் வந்த, திருச்சி கல்கண்டார்கோட்டையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களான விக்னேஷ்(19), அவரது நண்பர் ஷாரூன்(19) ஆகிய இருவரும் விபத்தில் சிக்கினர்.

இருவரும் தஞ்சாவூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில், ஷாரூனை நேற்று முன்தினம் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தஞ்சாவூர் எம்.பி. ச.முரசொலி ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.



இந்நிலையில், "தவெக தலைவர் விஜய்யை பின் தொடர்ந்தபோது விபத்தில் சிக்கி காயமடைந்த மாணவர்கள் இருவரையும் தவெக நிர்வாகிகள் யாரும் மருத்துவமனைக்கு சென்று பார்த்து ஆறுதல் கூறாத நிலையில், தமிழக அமைச்சரும், எம்.பி.யும் மருத்துவமனைக்கு சென்று மாணவரை சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன், மருத்துவ செலவுகளை கவனித்துக் கொள்வதாக உறுதி அளித்துள்ளனர்'' என்ற தகவல் சமூகவலைதளங்களில் பதிவிடப்பட்டுள்ளது.

அரசியல் செய்கிறர்கள்..

இதுகுறித்து தவெக மத்திய மாவட்டச் செயலாளர் விஜய் சரவணன் கூறியது: விபத்து ஏற்பட்ட நாளில், தவெக நிர்வாகிகள் சென்று பாதிக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோரை சந்தித்து, ஆறுதல் கூறினர்.

முதற்கட்டமாக, ரூ.1 லட்சம் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் நிர்வாகிகள் நான்கு பேர் மருத்துவமனைக்கு சென்று, காயமடைந்தவர்களின் பெற்றோருக்கு உதவி செய்து வருகிறார்கள். ஆனால், தவெகவினர் பார்க்கவில்லை என கூறுவது முற்றிலும் பொய். திமுக அமைச்சரும், எம்.பி.யும் இதில் அரசியல் செய்கிறார்கள் என்றார்.

# தேனி மாவட்டம்தேசிய மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) மாவட்டத்தில் உள்ள அனைத்து நீதிமன்ற வளாகத்திலும் 14.03.2026 அன்று நடைபெற உள்ளது






தேனி மார்ச். 11-

தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு அறிவுறுத்தலின் படி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைகள் குழு, தேனி மற்றும் வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு பெரியகுளம், உத்தமபாளையம், ஆண்டிபட்டி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்ற வளாகங்களில், 14.03.2026 அன்று தேசிய மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) நடைபெற உள்ளது.

தேசிய மக்கள் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர் உறுப்பினர்கள் கொண்ட அமர்வு முன்னிலையில் வழக்குகள் நடைபெற உள்ளது. இதில் மோட்டார் வாகன விபத்து, இழப்பீடு சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் நிலுவை யிலுள்ள வழக்குகள், சொத்து மற்றும் பணம் சம்பந்தப்பட்ட உரிமையியல் வழக்குகள் சமாதானம் செய்யக்கூடிய குற்ற வழக்குகள், ஜீவனாம்சம், நில ஆக்கிரமிப்பு வழக்குகள் தொழிலாளர் நலன் இழப்பீடு வழக்குகள், கல்விக்கடன், வங்கிக்கடன் சம்பந்தமான வழக்குகள் குடும்ப வன்முறை சட்ட வழக்குகள், காசோலை வழக்குகள், நுகர்வோர் வழக்குகள், வருவாய் துறை சம்பந்தப்பட்ட வழக்குகள் மற்றும் இதர பொது பயன்பாட்டு வழக்குகள் போன்றவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வழக்காடிகள் நேரடியாக பங்கேற்று நீதிமன்றத்தில் நிலுவை யிலுள்ள வழக்கு பிரச்சனைகளை சமாதானமாகவும், விரைவாகவும் முடித்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆகவே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவை யிலுள்ள வழக்காடிகள் மற்றும் பிரச்சனைகளை சுமுகமாக தீர்க்க விரும்பும் நபர்கள் 14.032026 அன்று நடைபெற உள்ள தேசிய மக்கள் நீதிமன்றத்தை அணுகி பயனடையலாம் என தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி.சொர்ணம் ஜெ.நடராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 163 மனுக்களை பெற்றுக்கொண்டார்.



■ எதிர்வரும் சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு, நீலகிரி மாவட்டம்109 கூடலூர் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட, நடுவட்டம், நடுவட்டம் பஜார், டி.ஆர்.பஜார், அனுமாபுரம், பைக்காரா ஆகிய பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிப்பது மற்றும் வாக்கினை உறுதி செய்வது குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டு விழிப்புணவுஏற்படுத்தப்பட்டது.

# உதயநிதி ஸ்டாலின் வருகையை முன்னிட்டுவிழா ஏற்பாடுகளை மதியழகன் எம்.எல்.ஏ ஆய்வு



கிருஷ்ணகிரி, மார்ச். 11-

கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகில் உள்ள மைதானம் மற்றும் தேவராஜ் மகாலில் வருகிற 13.03.2026 அன்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இந்த நிகழ்ச்சியில் புதிய அரசு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ஏற்கனவே நிறைவு பெற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கும் விழா நடைபெற உள்ளது. மேலும் திமுக கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமும் நடைபெற உள்ளது.

இதையொட்டி விழா நடைபெறும் இடமான கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகிலுள்ள மைதானம் மற்றும் தேவராஜ் மகாலில் நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ கழக நிர்வாகிகளுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது மேடை அமைப்பு, பொதுமக்கள் அமரும் வசதி, வாகன நிறுத்துமிடம், பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகளிடம் கேட்டறிந்து தேவையான ஆலோசனைகள் வழங்கினார். மேலும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் முறையாக மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட அவை தலைவர் நாகராஜ், நகர செயலாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.சி.ஆர். தினேஷ் ராஜன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# சம ஊதியம் என்று வருகிறதோ அன்று தான் நமக்கு உண்மையான மகளிர் தினவிழா



தாம்பரம் மார்ச். 11-

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் அருகே உலக மகளிர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் மகளிர் தின விழா கல்வி குழும முதன்மை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து தலமையில் லியோமுத்து உள்விளையாட்டு அரங்கில் வெகு சிறப்பாக கொண்டாடபட்டது,

இதில் சிறப்பு விருந்தினராக நடிகை ரோகினி கலந்து கொண்டு மாணவிகளிடம் சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முதல்வர்கள் முனைவர் ராஜா, முனைவர் பழனிகுமார், மேலாண்மை இயக்குநர் மாறன் உட்பட 5000க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் ,ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் மகளிர் தின விழாவில் பேசிய நடிகை ரோகினி

பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றால் பாதுகாப்பு எதிரிலிருந்து வேண்டும் என்று முதலில் கேட்க வேண்டும்,

பாதுகாப்பு ஒரு ஆணின் பார்வையில் இருந்தோ செய்கையில் இருந்தோ என்றால் நாம் பேச வேண்டியது வீட்டில் இருக்கிற, நாம் வளர்க்கிற, கூட பிறந்துள்ள நம்மளை வளர்த்தெடுத்த ஆண்களிடம் பேச வேண்டும்,

நாம் இன்னும் போராட வேண்டியது இருக்கிறது இந்த தலைமுறையில் சம ஊதியம் கிடைக்கிறதா ,ஒரே வேலையை செய்கிறோம் ஆனால் மத்தவர்களுக்கு கிடைக்கும் ஊதியம் கிடைக்கிறதா,

சம ஊதியம் என்று வருகிறதோ அன்று தான் நமக்கு உண்மையான மகளிர் தினத்தை கொண்டாட முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று மாணவிகள் மத்தியில் பேசினார்.



# ஜாகிர்வெங்கடாபுரம்அரசு உயர்நிலைப்பள்ளியில்போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி

கிருஷ்ணகிரி, மார்ச், 11-

கிருஷ்ணகிரி அடுத்த ஜாகிர்வெங்கடாபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடந்தது.

கிருஷ்ணகிரி அடுத்த ஜாகிர்வெங்கடாபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில், போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடந்தது. பேரணியை பள்ளியின் தலைமை ஆசிரியர் சுதாராணி கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில், மாணவ, மாணவியர் 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணியில், போதைக்கு அடிமையாகாதே, எதிர்காலத்தை தொலைக்காதே. உன் திறமைகளை போதைக்குள் புதைக்காதே, போதை உயிருக்கு கேடு. போதை மரணத்தை தரும் ஒரு மாய வலை. போதையின் பாதையில் செல்லாதே, எமனின் கையில் சிக்காதே. போதைக்கு அடிமையாகாதே, குடும்பத்தை இழக்காதே. போதையின்றி விழித்திரு, விலகியிரு, வாழ்ந்திடு போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன், கோஷங்களையும் எழுப்பியவாறு சென்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை போதை தடுப்பு மன்ற பொறுப்பாளர் வெண்ணிலா செய்திருந்தார். நிகழ்வில், உதவி தலைமை ஆசிரியர் சங்கர் மற்றும் ஆசிரியர்கள் பார்வதி, தவுலத், கவிதா, பரணி உள்பட பலர் பங்கேற்றனர்.



■ எதிர் வரும் சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு நீலகிரி மாவட்டம், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர், அலுவலகத்தில், மாவட்ட அளவிலான முதன்மை பயிற்சியாளர்களால்உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், சட்டமன்ற தொகுதி நிலை முதன்மை பயிற்சியாளர்கள், தேர்தல் பறக்கும் படை, நிலையான தேர்தல் கண்காணிப்பு குழுவினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.



# சூளகிரி அருகேசாட்சி கையெழுத்து எனக்கூறி நிலம் அபகரிப்புகலெக்டர் அலுவலகத்தில் முதியவர் மனு

கிருஷ்ணகிரி, மார்ச். 11-

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளுகிரி அருகே சாட்சி கையெழுத்து எனக்கூறி நிலத்தை அபகரித்துவிட்டதாக, கலெக்டர் அலுவலகத்தில் முதியவர் மனு அளித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே உள்ள இம்மிடிநாயக்கனப்பள்ளி பஞ்சாயத்து சின்னபேடப்பள்ளி கிராமத்தை சேர்ந்த வெங்கட்டப்பா(80), தனது இரு மருமகள்கள் மற்றும் பேரன்களுடன் நேற்று கலெக்டர் அலுவலகத்தில் மனு ஒன்றை அளித்தார். இது குறித்து அவர் கூறுகையில், எனக்கு இரு மகன்கள், இரு மகள்கள். என் தந்தை காலத்தில் இருந்து சின்னபேடப்பள்ளியில், வசித்து வருகிறேன். எனக்கு பாத்தியப்பட்ட 25 சென்ட் நிலத்தில் எங்கள் வீடு, தோட்டம் உள்ளது. கடந்த மூன்றாண்டுகளுக்கு முன், என் இரு மகன்களும் உடல்நலக்குறைவால் இறந்துவிட்டனர். என் இரு மருமகள்கள், பேரன்களுடன் வசித்து வருகிறேன்.

என் சொத்துகளை என் மகன் வழி பேரன்களுக்கு மாற்றி எழுத கடந்த சில மாதங்களுக்கு முன் முடிவெடுத்தேன். அப்போது, என் நிலம், எங்கள் பகுதியை சேர்ந்த அமேந்திரன் என்பவர் மகன் சக்திவேல் பெயரில் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தேன். கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் அவர்கள் வாங்கும் நிலத்திற்கு என்னை சாட்சி கையெழுத்து போட சொன்னார்கள். எனக்கு எழுத படிக்க தெரியாது. அவர்கள் கூறிய இடத்தில் கைரேகை வைத்தேன். என்னை ஏமாற்றி விட்டனர். இது குறித்து கடந்த, பிப்ரவரி மாதம் 10ம் தேதி மாவட்ட எஸ்.பி., அலுவலகத்தில் புகாரளித்தேன். சூளகிரி போலீசாருக்கு புகார் அனுப்பப்பட்டும் முறையாக விசாரிக்கவில்லை. மாவட்ட கலெக்டர் விசாரித்து என் நிலத்தை மீட்டு தர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் சுதந்திர கிசான் சங்கம் சார்பாக சமத்துவ இப்தார் நிகழ்ச்சி



கூடுவாஞ்சேரி மார்ச். 11-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் சுதந்திர கிசான் சங்கம் சார்பாக சமத்துவ இப்தார் நிகழ்ச்சி மற்றும் 200 நபர்களுக்கு உணவுப் பொருள் உடை வழங்கப்பட்டது ஐசர் அக்குவா நாள் 9/2/2026 அன்று மாலை 5.30 மணி அளவில் மகாலட்சுமி நகர் காரனை புதுச்சேரியில் நடைபெற்றது இதில் தலைமை மாநில பொதுச் செயலாளர் விவசாய அணி வி.அஜ்மீர் காஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது சிறப்பு அழைப்பாளராக யூனியன் முஸ்லிம் லீ மாநில பொதுச் செயலாளர் அல்ஹாஜ் கே ஏ எம் முஹம்மது அபூபக்கர் அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள் சிறப்பு அழைப்பாளர்களாக

மாநிலத் துணைச் செயலாளர் எஸ் ஏ இப்ராஹீம் மக்கி மாநில அவர்கள் சுதந்திர கிசான் சங்க மாநில தலைவர் ஏ.அப்துல் ஹாதி அவர்கள் துணை முதல்வர் புகாரி ஆலிம் அரபிக் கல்லூரி கிரசன்ட் பல்கலைக்கழகம் வண்டலூர் ஏ.அப்துல் ஹை நத்வி மௌலானா மௌலவி

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட தலைவர் கே.ஷேக் தாவூத் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஹாஜி எம்.முகமது யஹியா சித்திக் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் காரணை புதுச்சேரி

இ.சண்முகம் ஞானசேகரன் காரணை புதுச்சேரி ஊராட்சி மன்ற துணைத் தலைவர்

ஞானசேகரன் காரணை புதுச்சேரி ஊராட்சி முன்னாள் தலைவர். பத்மநாபன் அனிதா இளவரசன் காரணை புதுச்சேரி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் காட்டாங்குளத்தூர் ஒன்றிய தலைவர் தமுமுக ஏ.கே. சாகுல் ஹமீது

காரணை புதுச்சேரி வார்டு உறுப்பினர் தீபன் மாணிக்கம் . வாட் கவுன்சிலர் பிரசாந்த் வீரமுத்து லயன்ஸ் செந்தில் கார்த்திக் முன்னாள் வார்டு உறுப்பினர் சி.கே.குமார் எஸ்.சுதாகர் கிரஷர் அப்துல் ரகுமான் நிஜாம் எம் வண்டலூர் இ.காமேஷ் வரவேற்புரை வடசென்னை மாவட்ட துணைச் செயலாளர் வி.கரீம் நவாஸ் செங்கல்பட்டு மாவட்ட முதன்மை துணை தலைவர் ஏ.சர்தார் பாஷா தலைவர் காரணை புதுச்சேரி கிளை தலைவர் ப.காதர் செயலாளர் டி.ஜஹாங்கீர் எம்.எஸ் எப் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட மாவட்ட தலைவர் எம் அப்துல் பாசித் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் கே முகமது ஆசிப்

முகமது கவுஸ் கூடுவாஞ்சேரி ஊரப்பாக்கம் ரவி அசாருதீன் ஜகருள்

மற்றும் ஊர் பொதுமக்கள் ஜமாத்தார்கள் ஊர் முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் இறுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மற்றும் காரணை புதுச்சேரி ஜமாத் தலைவர் வி.சதாம் உசேன் நன்றி உரையாற்றினார்.

# வணிக சிலிண்டர் நிறுத்தம்: புதுச்சேரியில் ஹோட்டல்கள் மூடப்படுவதாக அறிவிப்பு



புதுச்சேரி, மார்ச்.11-
வணிக சிலிண்டர் நிறுத்தத்தால் புதுச்சேரியில் ஹோட்டல்கள் மூடப்படும் என ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

ஈரான் மீதான அமெரிக்க, இஸ்ரேல் போர் காரணமாக புதுச்சேரியில் வர்த்தக ரீதியிலான சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. கையிருப்பில் உள்ள சிலிண்டர்கள் இன்னும் ஓரிரு நாட்கள் மட்டுமே வரும் என்பதால் ஹோட்டல்களுக்கு வர்த்தக ரீதியிலான சிலிண்டர்கள் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா நகரான புதுவையில் 700க்கும் மேற்பட்ட ஹோட்டல்கள் உள்ளன. அத்துடன் ஏராளமான சாலையோர உணவகங்களும் இயங்குகின்றன. சுற்றுலா பயணிகள் பெரிய ஹோட்டல்கள் தொடங்கி சிறிய ஹோட்டல்களை நம்பி புதுச்சேரி வருகின்றனர்.

தற்போது வணிக சிலிண்டர் நிறுத்தம் தொடர்பாக ஹோட்டல் உரிமையாளர் சங்கம் தலைவர் பாஸ்கரனிடம் கேட்டதற்கு, ‘‘புதுச்சேரியிலுள்ள 700க்கும் மேற்பட்ட ஹோட்டல்களுக்கு நாள்தோறும் 1000க்கும் மேற்பட்ட வணிக சிலிண்டர்கள் தேவை.

சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டாதால் நாளை (மார்ச் 11) முதல் படிப்படியாக ஹோட்டல்கள் மூடப்படும்’’ என தெரிவித்தார்.

# அரசு துறைகளில் நிரந்தர பணியாளர்களையே நியமிக்க வேண்டும் அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, மார்ச்.11-
மக்கள் நலவாழ்வுத்துறை உள்பட அனைத்துத் துறைகளில் ஒப்பந்த முறை நியமனங்கள் ரத்து செய்யப்படும்; நிரந்தர அடிப்படையில் மட்டுமே பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று முதலமைச்சர் அறிவிக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அன்புமணி ராமதாஸ் தனது எக்ஸ் தளத்தில், “தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் தவிர பிற பணிகளுக்கு இனி நிரந்தர அடிப்படையில் எவரையும் நியமிக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த செய்தி உண்மையானதாக இருந்தால் சமூகநீதிக்கும், கண்ணியமான மனிதவாழ்க்கைக்கும் எதிரான இந்த நடவடிக்கை கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற மக்கள் நலவாழ்வுத் துறையின் ஆய்வுக் கூட்டத்தில், நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு செலவுகளைக் குறைக்கும் வகையில் அரசு மருத்துவமனைகளில் செவிலியர்கள், மருந்தாளுனர்கள், ஆய்வக நுட்புனர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் இனி நிரந்தரமாக நியமிக்கப்படக் கூடாது என்றும், ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே நியமிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுத்துறைகளில் டி பிரிவு பணிகளில் மட்டும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சி பிரிவு பணியிடங்களுக்கும் இந்த முறையை நீட்டிப்பது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் எம்.எப் பரூக்கி, சி.சந்திரமவுலி, தேவ. ஜோதி ஜெகராஜன் உள்ளிட்ட ஐவர் அடங்கிய மனிதவள சீர்திருத்தக் குழுவை 18.10.2022ஆம் நாளிட்ட 115 எண் கொண்ட அரசாணை மூலம் தமிழக அரசு அமைத்தது. அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அக்குழுவின் ஆய்வு வரம்புகள் மறு ஆய்வு செய்யப்படும் என அரசு அறிவித்தது.

ஆனால், அவ்வாறு செய்யப்படாததால், பரூக்கி தலைமையிலான குழு பணியை தொடங்காத நிலையில், எந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. அதையும் கடந்து இது போன்ற கொள்கை முடிவுகள் அமைச்சரவையில் தான் எடுக்கப்பட வேண்டும். மாறாக, இந்த முடிவை தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் எடுக்கிறார்கள் என்றால் முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் பொம்மைகள் தானா?

சுகாதாரத்துறையில் ஏற்கனவே மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பணி நிலைப்பு செய்யும் நடைமுறை உள்ளது. இந்த நடைமுறையே மாற்றப்பட வேண்டும்; அனைத்துப் பணியாளர்களும் நேரடியாக நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை ஆகும்.

ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்படும் போது அதில் இட ஒதுக்கீட்டு முறை கடைபிடிக்கப்படாது. இது சமூகநீதியை படுகொலை செய்யும் செயலாகும். இது தான் திமுக அரசு சமூகநீதியை காக்கும் லட்சணமா? இதைத் தான் திமுக விரும்புகிறதா? என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கமளிக்க வேண்டும், மக்கள் நலவாழ்வுத்துறை உள்பட அனைத்துத் துறைகளிலும் ஒப்பந்த முறை நியமனங்கள் ரத்து செய்யப்படும்; நிரந்தர அடிப்படையில் மட்டுமே பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று முதலமைச்சர் அறிவிக்க வேண்டும்’’ என வலியுறுத்தியுள்ளார்.

# கரூர் துயரம் குறித்து சிபிஐ சம்மன் மார்ச் 17ல் ஆஜராகிறார் செந்தில் பாலாஜி



கரூர், மார்ச்.11-
கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளதால், மார்ச் 17ம் தேதி நேரில் ஆஜராகி உரிய விளக்கங்களை அளிக்க உள்ளதாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த ஆண்டு செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சார கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது தொடர்பாக தவெக தலைவர் விஜய், தவெக நிர்வாகிகள், மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஐ.ஜி, எஸ்.பி ஆகியோரிடம் சிபிஐ விசாரணை நடத்தியது. இந்நிலையில் டெல்லி சிபிஐ அலுவலகத்தில் தவெக தலைவர் விஜய் ஆஜராகக்கூறி அன்மையில் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு அவர் 15 நாள் அவகாசம் கேட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, ஏஎன்ஐ செய்தி நிறுவனம், கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பான விசாரணைக்கு ஆஜராகக் கூறி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு சம்மன் அனுப்பியதாகவும், அதனை செந்தில் பாலாஜியோ, அவரது பிரதிநிதிகளோ அவரது வீட்டிலோ, அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளவில்லை எனவும், மேலும் அவரது இமெயிலுக்கும் சம்மன் அனுப்பப்பட்டதாகவும் அதற்கு அவர் எவ்வித பதிலும் (ரெஸ்பான்ஸ்) அளிக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தது.

இதுகுறித்து இந்து தமிழ் திசை நாளிதழிடம் தெரிவித்த முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, ”கரூர் அருகேயுள்ள ராமேஸ்வரப்பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு சிபிஐ அதிகாரிகள் கடந்த இரு நாட்களுக்கு முன் வந்து என் தந்தை வேலுசாமியிடம் நான் எங்கே என கேட்டுள்ளனர். அவர் நான் சென்னை சென்றிருப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் என்னை தொடர்பு கொண்டபோது அவர்கள் கடிதம் எதுவும் அளித்தால் பெற்றுக்கொள்ளுமாறு தந்தையிடம் தெரிவித்தேன். ஆனால், அவர்கள் சம்மன் எதுவும் அளிக்கவில்லை. எனது அலுவலகத்திற்கோ, இமெயிலுக்கோ சிபிஐ சம்மன் எதுவும் அனுப்பவில்லை’’ என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி இமெயிலுக்கு இன்று (மார்ச் 10ம் தேதி) காலை சிபிஐ சம்மன் அனுப்பியதாக கூறப்படுகிறது.

இது குறித்து முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ”கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக, சிபிஐ சம்மன் அனுப்பியது குறித்து முன்னுக்கு பின் முரணாக சில ஊடங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. வருகின்ற மார்ச் 17ம் தேதி அன்று நேரில் வந்து விளக்கமளிக்குமாறு சிபிஐ அனுப்பிய சம்மன் அடிப்படையில், அவர்களது கேள்விகளுக்கு நேரில் சென்று உரிய விளக்கங்களை அளிக்கவுள்ளேன்’’ என்று தெரிவித்துள்ளார்.

# விறகு அடுப்பு பயன்படுத்தும் நிலை: சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து ஆனி ராஜா சாடல்



புதுச்சேரி, மார்ச்.11-
‘‘நாடு முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் விறகு அடுப்பு பயன்படுத்தும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். நாட்டில் என்ன நடக்கிறது என்பதை மத்திய அரசு மக்களுக்கு தெளிவுப் படுத்த வேண்டும்’’ என்று இந்திய கம்யூனிஸ்ட் அகில இந்திய செயலர் ஆனி ராஜா தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநில குழு கூட்டத்தில் அகில இந்திய செயலாளர் ஆனி ராஜா, தேசிய அரசியல் விளக்க உரையாற்றினார். மாநில செயலாளர் அ.மு.சலீம் மாநில அரசியல் தேர்தல் பணி குறித்து உரையாற்றினார். தேசிய குழு உறுப்பினர் தினேஷ் பொன்னையா வேலை அறிக்கை வாசித்தார். இந்நிகழ்வில் முன்னாள் எம்எல்ஏ நாரா கலைநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.இக்கூட்டத்தில் வக்பு வாரியத்தில் ஆர்எஸ்எஸ் பற்றாளர் இருப்பதால் அதை மாற்றி அமைக்க வேண்டும், ப்ரிபெய்டு மீட்டர் திட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும், ஏஎப்டி, பாரதி, சுதேசி மில்களை இணைத்து ஜவுளி பூங்கா அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சிபிஐ அகில இந்திய செயலர் ஆனி ராஜா, ”வரும் 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முடிவு எடுத்து, அதை நோக்கி நகர்கிறோம். இந்த ஐந்து மாநிலங்களுக்கு மட்டுமல்லாது இந்தியா முழுவதற்கும் முக்கியமான தேர்தல் இது. இந்தியாவில் பாசிச ஆட்சி இருக்கிறது.இந்தியாவின் அரசியல் சாசன சட்டத்தின் படி ஆட்சி நடைபெறவில்லை. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறும் கொள்கைகளை மோடி அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தியாவை அடமானம் வைத்து விட்டார்கள். எரி பொருள் தட்டுப்பாடு பற்றி எந்த கவலையும் இல்லாமல் அமெரிக்காவின் முடிவுகளுக்கு பாஜக அரசு செவி சாய்த்து வருகிறது.

ஐந்து மாநிலங்களில் தேர்தல் அந்தந்த சட்டமன்றங்களுக்கான தேர்தல் மட்டுமல்ல இந்தியாவை காப்பாற்றுவதற்கான தேர்தல். மதச்சார்பற்ற சக்திகள் ஒன்றிணைந்து இந்தத் தேர்தலை சந்திக்கிறோம். புதுச்சேரியில் இண்டியா கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட்4 தொகுதிகளை கேட்டுள்ளது. நாடு முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டில் என்ன நடக்கிறது? எங்கிருந்து நாம் கச்சா எண்ணெய் வாங்குகிறோம்? எவ்வளவு வருகிறது? என மத்திய அரசு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். பல இடங்களில் விறகு அடுப்பு பயன்படுத்தும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்’’ என்று தெரிவித்தார்.




# ஈரான் போர் தாக்கம்: இந்திய ஏற்றுமதி துறைக்கு ரூ.92,000 கோடி பாதிப்பு

புதுடெல்லி, மார்ச்.11-
அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையே தொடர்ந்து நீடிக்கும் போர் காரணமாக, ஹார்முஸ் நீரிணை பகுதியில் சரக்கு கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ளதால் கச்சா எண்ணெய் விலை பன் மடங்கு உயர்ந்து வருகிறது.

இது அனைத்து துறைகளின் வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்தும். மத்திய கிழக்கில் நடைபெறும் இந்த போர் பதற்றம் காரணமாக, இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி ரூ.75 ஆயிரம் கோடி முதல் ரூ.92 ஆயிரம் கோடி வரை பாதிப்பை சந்திக்கக்கூடும் என்று ஏற்றுமதியாளர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன. மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல் சூழல் ஏற்கெனவே ஆர்டர்கள், கப்பல் கட்டணம் மற்றும் சரக்கு நகர்வுகளை பாதித்து வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்த இடையூறுகள் தொடர்ந்தால், மார்ச் மாத ஏற்றுமதியிலும், ஒட்டு மொத்த 2026 நிதியாண்டின் ஏற்றுமதி புள்ளி விவரங்களிலும் இதன் தாக்கம் வெளிப்படையாகத் தெரியும் என்று தொழில் துறை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். சரக்கு போக்குவரத்து செலவு கடுமையாக உயர்ந்துள்ளதாகவும், கப்பல் நிறுவனங்கள் ஒரு ஷிப்மெண்டுக்கு ரூ.1.38 லட்சம் முதல் முதல் ரூ.3.69 லட்சம் வரை கூடுதல் கட்டணம் விதிப்பதாகவும் ஏற்றுமதியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# போர் எதிரொலியாக மூலப்பொருட்கள் விலை உயர்வால் திருப்பூரில் சாய ஆலைகள் மூடப்படும் அபாயம்!



ஈரான் போர் காரணமாக மூலப்பொருட்கள் விலை உயர்வால் துணிகளுக்கு சாயமிட கிலோவுக்கு ரூ.20 உயர்ந்தது.

திருப்பூர், மார்ச்.11-
போர் எதிரொலியாக மூலப்பொருட்கள் விலை உயர்வால் திருப்பூரில் சாய ஆலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. போர் காரணமாக மூலப்பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மூலப் பொருள்கள் விலை உயர்ந்துள்ளது. இஸ்ரேல் ஈரான் போர் காரணமாக மூலப்பொருட்கள் விலை உயர்வால் துணிகளுக்கு சாயமிட கிலோவுக்கு ரூ.20 உயர்ந்தது. திருப்பூரில் இயங்கி வரும் 80% சாய ஆலைகளில் அடுத்து வரும் 10 முதல் 15 நாட்களுக்கான சாயங்கள் மட்டுமே இருப்பு உள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் போர் நீடித்தால் அடுத்த 15 நாட்களுக்குப் பிறகு சாய ஆலைகள் முடங்கும் அபாயம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹரியானாவில் கபாடியாவாஸ் கிராமத்தில் கட்டுமான பணியின்போது மண் சரிந்து 7 தொழிலாளர்கள் உயிரிழப்பு!



சண்டிகர், மார்ச்.11-
ஹரியானாவில் கபாடியாவாஸ் கிராமத்தில் கட்டுமான பணியின்போது மண் சரிந்து 7 தொழிலாளர்கள் உயிரிழந்தார். 150 ஏக்கர் பரப்பளவில் ரியல் எஸ்டேட் நிறுவனம் அடுக்குமாடி குடியிருப்பு கட்ட அஸ்திவாரம் தோண்டியபோது மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

ஹரியானாவில் கபாடியாவாஸ் கிராமத்தில் கட்டுமானப் பணியில் இருந்த ஒரு கட்டிடத்தின் சுவர் திடீரென இடிந்து விழுந்ததில், 7 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 5 தொழிலாளர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சுவர் இடிந்து விழுந்த தருணத்தில், சுமார் 12 முதல் 15 தொழிலாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர். இது குறித்து தகவல் அறிந்தவுடன், உள்ளூர் போலீஸாரும் மாநில பேரிடர் மீட்புப் படையினரும் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

"இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். துரதிர்ஷ்டவசமாக அவர்களில் 7 பேர் உயிரிழந்துவிட்டனர். 4 பேர் பலத்த காயங்களுடன் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்" என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக அரசு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த விபத்து குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்கள் புத்தக பை, ஷூ வாங்க தலா ரூ.1,000 புதுச்சேரி முதல்வர் அறிவிப்பு



புதுச்சேரி, மார்ச்.11-
புதுச்சேரியில் 80 ஆயிரம் மாணவ, மாணவிகள் ஷூ, புத்தகப்பை வாங்க வங்கிக்கணக்கில் உடனடியாக தலா ஆயிரம் ரூபாய் செலுத்தப்படும் என்று முதல்வர் ரங்கசாமி அறிவித்தார்.

புதுச்சேரி அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் இயக்குனரகம் சார்பில் கம்பன் கலையரங்கில் விளையாட்டு வீரர்களுக்கு பரிசு தொகை வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற முதல்வர் ரங்கசாமி இன்று பேசியதாவது: விளையாட்டு வீரர்களுக்கு அனைவருக்கும் ஊக்கத்தொகை தர ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்வோம். கல்வித்துறையுடன் விளையாட்டுத்துறை இணைந்து இருந்ததால் முக்கியத்துவம் கிடைக்கவில்லை. அதனால் தனித்துறையாக விளையாட்டுத்துறையை கொண்டு வந்துள்ளோம்.

பயிற்சியாளர்களுக்கு முன்பு ரூ. 10 ஆயிரம் ஊதியம் தந்த நிலையில், தற்போது ரூ. 50 ஆயிரம் தருகிறோம். சோர்ந்திருந்த பயிற்சியாளர்களுக்கு தெம்பு ஏற்பட்டுள்ளது. ஊழியர்களுக்கும் ஊதியம் உயர்த்தி தந்துள்ளோம். விளையாட்டில் அதிகளவில் பங்கு கொண்டு அதிக பதக்கம் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையுள்ளது. போட்டியில் பங்கேற்க வடநாட்டுக்கு செல்ல பணம் இல்லாமல் சிரமம் படுவார்கள். தனிப்பட்ட முறையில் தந்தோம். இப்போது தனிநிதி ஒதுக்கி, வீரர்கள், வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலம் செல்ல அரசே உதவும். அரசு நிதியிலேயே இனி செல்லலாம். கிராமங்களில் விளையாட்டு திடல் அதிகம் தேவை. மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் விளையாட்டுதிடல்களை மேம்படுத்த ரூ.200 கோடி தருவதாக சொல்லியுள்ளார். பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் அரசு பணிக்கு சென்றுள்ளனர். இந்த நம்பிக்கையும் அரசு தந்துள்ளது. விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு தந்துள்ளோம்.

அரசு பணியில் 5 ஆயிரம் பேருக்கும், தனியாரில் 8 ஆயிரம் பேருக்கும் வேலை வாய்ப்பை அளித்துள்ளோம். ஐடி பார்க், சிறப்பு பொருளாதார மண்டலத்தில் தொழிற்சாலைகளை கொண்டு வரவுள்ளதால் 50 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவோம். புதுச்சேரியில் அரசு பள்ளி குழந்தைகளுக்கு புத்தகப்பை, ஷூ வாங்கி தர தேர்தல் நேரத்தில் சிரமம். அதனால் இரண்டும் வாங்க ஆயிரம் ரூபாய் வங்கி கணக்கில் செலுத்தப்படும். உடனடியாக 80 ஆயிரம் குழந்தைகளுக்கு வங்கி கணக்கில் ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்படும். குழந்தைகளின் பெற்றோரில் தாய் வங்கி கணக்கில் சேர்க்கப்படும் என்றார். நிகழ்வில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், சட்டப்பேரவைத்தலைவர் செல்வம், அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் பங்கேற்றனர்.

# திருப்பூர் மாவட்டம் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

திருப்பூர் மார்ச். 11-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது. திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 690 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலை யிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கை யினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் சார்பில் இயற்கை மரண உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் தலா ரூ.17,000/ மதிப்பீட்டில் 22 நபர்களுக்கு ரூ.3,74,000/ மதிப்பீட்டிலான காசோலைகளை மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்தினருக்கு வழங்ககினார்கள்

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) துரை முருகன், (வேளாண்மை) ஷீலா பூசலெட்சுமி, தனிதுணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) பத்மபிரியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சந்திரமோகன் மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் மற்றும் மருத்துவம் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மாதந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.மீரா, முதல்வர், திருப்பூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மரு.மனோண்மணி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி, மாநகர நல அலுவலர் மரு.முருகானந்த் ஆகியோர் உள்ளனர்.



■ திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் எஸ்.சித்ரா தலைமையில் மைய அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து பெண் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் வாழ்த்துக்கள் கூறியும் நிகழ்ச்சியை துவக்கி வைத்து, குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். உடன் உதவி ஆணையாளர் (மண்டலம் 2) பாரிஜான், உதவி திட்ட அமைப்பாளர் சௌதாமணி, உதவி நகர திட்டமிடுநர் சுப்புத்தாய் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# சிவகங்கை மாவட்டம்: நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் தீவிர தேர்தல் விழிப்புணர்வு மானாமதுரையில் பொதுமக்கள் நேரடி செயல்முறை விளக்கம்

மானாமதுரை மார்ச். 11-

2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் பொற்கொடி அறிவுறுத்தலின்படி, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தனித்தனி வாகனங்கள் மூலம் விழிப்புணர்வு

தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிவகங்கை, மானாமதுரை, காரைக்குடி மற்றும் திருப்பத்தூர் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் எனத் தனித்தனியாக விழிப்புணர்வு வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் அந்தந்தத் தொகுதிகளில் உள்ள கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடு குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.




மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு முகாம்

இதன் ஒரு பகுதியாக, இன்று மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு வாகனம் மூலம் பொதுமக்களுக்கு நேரடி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

* நேரடி மாதிரி வாக்குப்பதிவு: பேருந்து நிலையத்திற்கு வந்த பயணிகள் மற்றும் பொதுமக்கள், வாக்குப்பதிவு இயந்திரத்தில் (Ballot Unit) எவ்வாறு வாக்களிப்பது என்பதைக் கற்றுக்கொண்டனர்.

* ஃஷிஃஷிறிகிஜி இயந்திரத்தின் முக்கியத்துவம்: தாங்கள் அளித்த வாக்கு சரியான வேட்பாளருக்குத்தான் பதிவாகியுள்ளதா என்பதை VVPAT இயந்திரத்தில் 7 விநாடிகள் தோன்றும் சீட்டு மூலம் உறுதி செய்வது குறித்து அதிகாரிகள் விளக்கினர்.

* கண்ணால் காண்பதே மெய்: "கண்ணால் காண்பதே மெய்" என்ற வாசகத்தை வலியுறுத்தி, வேட்பாளரின் வரிசை எண், பெயர் மற்றும் சின்னம் ஆகியவற்றைத் திரையில் சரிபார்த்து திருப்தியடைவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மாவட்ட நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையின் மூலம் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் தேர்தல் பிரிவு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மானாமதுரையில் கண்டன ஆர்ப்பாட்டம்: ஆகாஷ் மரணம், ராசு மீது தாக்குதல் கண்டித்து போராட்டம்

மானாமதுரை மார்ச். 11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் இடைக்காட்டூரில் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த ராசு என்பவரை சாதிவெறி கும்பல் வாளால் வெட்டி கொலைவெறி தாக்குதல் நடத்தியதை கண்டித்தும், மானாமதுரை கிருஷ்ணராஜபுரத்தைச் சேர்ந்த பட்டியல் சமூக இளைஞர் ஆகாஷ் என்பவரை காவல்துறையினர் விசாரணைக்கு அழைத்து



சென்று தாக்கியதில் உயிரிழந்ததாகக் கூறி அதனை கண்டித்தும், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மானாமதுரையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆகாஷ் மரணத்திற்கு காரணமான காவல்துறையினர் மீது கொலை வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டக்காரர்கள் கோரிக்கை வைத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வே.பாலையா, மாவட்ட செய்தித் தொடர்பாளர் ஆதிவளவன், ஒன்றிய செயலாளர் (மே) கிருஷ்ணமூர்த்தி, நகர பொறுப்பாளர் பாரதிராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாநகராட்சி மாண்புமிகு மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் மைய அலுவலக வளாகத்தில்தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோராக மாற்றும் திட்டத்தின் மூலம் மாநகராட்சி பணிகளுக்காக கழிவு நீர் அகற்றும் 6000 லி கொள்ளளவு கொண்ட வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கினார்கள். உடன் துணை மேயர் திரு.ரா. பாலசுப்ரமணியம், மாநகர நல அலுவலர் மரு. முருகானந்த், துணை ஆணையாளர் எஸ்.சித்ரா, உதவி ஆணையாளர் (மண்டலம்2) திருமதி பாரிஜான், நவஜீவன் நிறுவனத்தின் தமிழ்நாட்டு ஒருங்கிணைப்பாளர் ரவி, சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், நிதி வழங்கும் வங்கி (பேங்க் ஆப் பரோடா) (ராக்கியாபாளையம் கிளை) உட்பட பலர் உள்ளனர்..



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.56 பொன்னகரம் பிராட்வே பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஆய்வு மேற்கொண்டு அப்பகுதி பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார் அருகில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலகத்தை திறந்து வைத்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர்.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் பங்கேற்றார்கள் உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ் வி செந்தில் குமார் சின்னக்காம்பாளையம் பேரூர் கழக செயலாளர் ரா பன்னீர்செல்வம் கலந்து கொண்டனர்



# பழனி மாரியம்மன் கோவிலுக்கு வ உ சி மன்றத்தின் சார்பாக 1008 பால்குடம் உற்சாக சாந்தி விழா மற்றும் அன்னாபிஷேகம் நடைபெற்றது

பழனி, மார்ச்.11-

பழனி மாரியம்மன் கோவில் மாசித்திருவிழாவின் நிறைவாக, வ.உ.சி மன்றம் சார்பில், பாண்டிய வேளாளர் மடத்திலிருந்து, 1008 பால்குடங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு அம்மனுக்கு உற்சவ சாந்தி அபிஷேகம் நடைபெற்றது.

பெண்கள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலம், நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று கோவிலை அடைந்து, அம்மனுக்கு சிறப்புப் பாலாபிஷேகம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர் மற்றும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு மதியம் அன்னதானம் வழங்கப்பட்டனர்



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக மதுரை மாவட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுப்பிரமணியபுரத்தில் ரூபாய். 62.68 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 396 (ஷி+9) அடுக்குமாடி குடியிருப்புகளை பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் பயனாளிகளுக்கு வீட்டிற்கான ஆணை மற்றும் சாவியை வழங்கி குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார். மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் இ.ஆ.ப., , மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் , மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# மானாமதுரை அருகே அதிர்ச்சி: அரசு வழங்கிய தொகுப்பு வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்து விபத்து

மானாமதுரை மார்ச். 11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அறிமண்டபம் அருகே சேதுராயனேந்தல் கிராமத்தில், அரசு வழங்கிய தொகுப்பு வீட்டின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சம்பவம் குறித்து விரிவான தகவல்:

சேதுராயனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த தேன்மொழி (52), அரசு நிதியுதவியுடன் கட்டப்பட்ட தொகுப்பு வீடு திட்டத்தின் கீழ் ஒரு வீட்டைப் பெற்று அங்கு வசித்து வருகிறார். இந்நிலையில், நேற்று அவர் வீட்டில் இருந்தபோது, எதிர்பாராத விதமாக வீட்டின் மேற்கூரை பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது.

அதிர்ஷ்டவசமாக, மேற்கூரை சரிந்து விழுந்த சமயத்தில் தேன்மொழி நூலிழையில் உயிர் தப்பினார். இடிபாடுகளில் சிக்காமல் அவர் காயமின்றி தப்பியது அப்பகுதி மக்களிடையே நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.

குற்றச்சாட்டுகள்:

இந்த விபத்து குறித்து அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பல்வேறு புகார்களை முன்வைத்துள்ளனர்:

* தரமற்ற கட்டுமானம்: அரசு மூலம் கட்டித் தரப்படும் வீடுகள் முறையான தரக்கட்டுப்பாட்டுடன் கட்டப்படுவதில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

* உயிருக்கு ஆபத்து: கட்டி முடிக்கப்பட்டு சில காலமே ஆன நிலையில் மேற்கூரை இடிந்து விழுந்தது, கட்டுமானப் பணியில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் தரம் குறித்துக் கேள்வியை எழுப்பியுள்ளது.

* நிர்வாகக் குறைபாடு: அதிகாரிகளின் போதிய மேற்பார்வை இல்லாததே இது போன்ற தரம் குறைந்த கட்டிடங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படக் காரணம் எனச் சாடப்படுகிறது.

கோரிக்கை:

பாதிக்கப்பட்ட தேன்மொழிக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், இப்பகுதியில் உள்ள மற்ற அரசு தொகுப்பு வீடுகளின் உறுதித்தன்மையை அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், தரமற்ற முறையில் வீடு கட்டிய ஒப்பந்ததாரர்கள் மற்றும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161